வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

03.11.2020 செவ்வாய்க்கிழமை

# பேலியகொடை தொற்றாளர்களுடன் தொடர்புடைய 111 பேருக்கு தொற்று

கொழும்பு,நவ.03

கொழும்பு பேலிய கொடை கொரோனா கொத்தணி தொற்றாளர்க ளுடன் நெருங்கிப் பழகிய 111 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப் பிட்டார். (எ)

# பி.சி.ஆர். சோதனைக்குட்படுவோர் நிச்சயம் தனிமைப்படுத்தப்படுவர்

## இராணுவ தளபதி அறிவிப்பு

கொழும்பு,நவ.03

பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுவோர் நிச்சயம் தனிமைப் படுத்தலுக்கு உட்பட வேண்டும் என இராணுவத் தளபதி லெப் டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த 3 நாட் களில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் பெருமளவானோர் மேல் மாகா ணத்திலேயே இனங்காணப்பட் டனர். எனவே தான் அங்கு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீடிக்கத் தீர்மானிக் கப்பட்டது என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தொடர்ந்து 10 நாள் கள் மேல் மாகாணத்தை

02

# முதல் கொரோனா நோயாளி கிளிநொச்சியில் அடையாளம்

கிளிநொச்சி, நவ 03

கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது கொவிட் -19 நோயாளி அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தருமபுரம் மூன்றாம் யுனிட்டைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் உள்ளமை நேற்று இரவு கண்டறியப் பட்டுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் யாழ்.

02

# பாராளுமன்றத்துக்கு வருகின்றார் பஸில்!

## இன்று பதவியேற்கத் திட்டம் அமைச்சுப் பதவியும் தயார்

கொழும்பு, நவம்பர் 03

பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான பஸில் ராஜ பக்ஷ தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நிய மிக்கப்படவுள்ளார்.

அவர் இன்று பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்க வுள்ளார் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எதிர் பார்க்கப்படுகின்றது.

02



# கூடிக்குறைவடைந்த கொரோனா மரணம்!

கொழும்பு, நவ 03

கொரோனா வைரஸ் தொற்று நோயுடன் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நப ரின் மரணம் நாட்டின் 22ஆவது கொரோனா மரணமாகக் கருதப்படாது என ராஜபக்ஷ அரசு நேற்று மாலை அறிவித்தது.

நேற்றுக் காலை இவரது மரணம் 22ஆவது கொரோனா மரணமாக அறிவிக்கப்பட்ட நிலையில் அதனை அரசு மீளப்பெற்றுள்ளது.

அதன்படி இலங்கையில் இதுவரை பதிவான கொரோனா மரணங்கள் 21ஆகக் கருதப்படும்.

02

# நூற்றுக்கணக்கான திமிங்கிலங்கள் கரையொதுங்கின!



கொழும்பு, நவ. 03

களுத்துறை - பாணந்துறை கடற்கரையில் நேற்று திங்கட்கிழமை நூற்றுக்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் திடீரெனக் கரை ஒதுங்கின.

இவ்வாறு கரையொதுங்கிய திமிங்கிலங்களை மீண்டும் ஆழமான பகுதிக்குள் கொண்டு சென்று விடும் நடவடிக்கைகளை பொலிஸார் மற்றும் கடலோரக் காவல்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, ஊடரங்குச் சட்டம் அமுலில் உள்ளபோதும் பெருமளவான

02

# ஊரடங்கு அனுமதி பத்திரத்துக்கு புதிய முறை

கொழும்பு,நவ.03

தனிமைப்படுத்தல் ஊர டங்கு உத்தரவு காலப்பகுதி யினுள் ஏனைய உற்பத்தி நடவடிக்கைகளை மேற் கொள்ள துறை ரீதியான ஊரடங்கு அனுமதிப்பத் திரம் ஒன்றை வெளியிட புதிய முறைமை ஒன்று அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரை யாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை secetaryshmws.gov.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம் - என்றார்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொக்குவில் அலுவலகம் முற்றுகை!

## தமிழ்ச்செல்வனை நினைவுகூரக்கூடாது என எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ 03

கொக்குவிலில் அமைந் துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவ லகம் நேற்று மாலை பொலி ஸாரால் முற்றுகையிடப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை நினைவுகூரும் வகையிலான நிகழ்வுகள் எத னையும் நடத்தக்கூடாது என அங்கு நின்ற முன்ன ணியின் உறுப்பினர்கள் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

அவ்வாறு நினைவு கூருவதற்கு யாரா வது முற்பட்டால் அவர்கள் கைது செய் யப்படுவார்கள் எனவும் பொலிஸார் எச்ச ரித்தனர்.

அதேவேளை, முன்னணியின்

02

# அரசு நாடு முழுவதுமே வைரஸை பரப்பியுள்ளது

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு,நவ.03

நாட்டில் நன்மை இடம்பெறும்போது அதற் குத் தாமே காரணம் என்று கூறும் ஆளுந்தரப்பு, ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை மக்கள் மீது சுமத்துகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலை வர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போது அவர்

02

# நான்கு பிரதேசங்கள் கேகாலையில் முடக்கம்

கொழும்பு, நவ 03

கேகாலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தனி மைப்படுத்தல் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள் ளன.

ஹேமதகம, மாவனல்ல, புளத்கோஹூ பிட்டி பொலிஸ் பிரிவுகள் மற்றும் கல்கமுவ பிரதேச சபை எல்லை ஆகிய பகுதிகளே தனிமைப்படுத் தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குருநாகல் மாவட்டத்தில் கிரியுல்ல பொலிஸ் பிரிவும் தனிமைப் படுத்தல் பிரதேசமாக அறிவிக்கப்

02

# புதுக்குடியிருப்பில் இருவருக்கு தொற்று

முல்லைத்தீவு, நவ. 03

முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பை சேர்ந்த இருவ ருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட் டது.

யாழ்ப்பாணம் கொரோனா ஆய்வு கூடத்தில் நேற்று நடத் தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இந்தப் புதிய

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# தனிமைப்படுத்தப்பட்டோர் விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை பாயும்



கொழும்பு,நவ.03

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் உரிய தனிமைப்படுத்தல் விதிகளை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நபர்களை சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும், பரிசோதனை செய்து விட்டு சென்ற பின்னர் அவர்கள் வீட்டை விட்டு வெளியில் வேறுஇடங்களுக்குச் செல்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் அத்தகைய நபர்கள் தொடர்பில் கவனம் செலுத்த தனிமைப் படுத்தப்பட்டுள்ள நபர்கள் இருக்கும் வீடுகளின் அருகில் கிராம உத்தியோகத்தர்கள் உதவியுடன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.புலனாய்வு அதிகாரிகள் அவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.

இதேவேளை, தனிமைப்படுத்தப் பட்டுள்ள நபர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தால் அவர்கள் மூலம், ஏனையோருக்கும் தொற்று பரவும் வாய்ப்பு அதிகளவில் காணப்படுகின்றது. அதனைக்கருத்தில் கொண்டே அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொள்ளாது, பொறுப்பற்றவிதத்தில் செயல்படும் நபர்களுக்கு எதிராகவும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகளுக்குச் செல்லும் நபர்களுக்கு எதிராகவும் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமையவும் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமையவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

(எ)

# யாழில் 51 பேருக்கு பி.சி.ஆர். சோதனை எவருக்கும் தொற்று இல்லை என முடிவு

யாழ்ப்பாணம்,நவ.03

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட 51 பி.சி.ஆர். பரிசோதனைகளில் எவருக்குமே கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வந்த யாழ்ப் பாணம், வேலணை மற்றும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த 6 பேருக்கு கடந்த சனிக்கிழமை கொறொனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர்களுடன் பஸ்ஸில் பயணித்த 21 பேருக்கு நேற்று முன்தினம் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றின் பெறுபேறுகள் நேற்றிரவு வெளிவந்தன. அதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் 6 சந்தைகளில் இருந்து பெறப்பட்ட 30 பேரின் மாதிரிகளின் பெறுபேறுகளும் நேற்றிரவு கிடைக்கப்பெற்றன. இவற்றில் எவலுக்குமே தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது.

# பங்குத்தந்தை உட்பட மூவர் மீது தனிமைப்படுத்தல் சட்டம் பாய்ந்தது

திருகோணமலை, நவ. 03

கொரோனா ஆபத்து எச்சரிக்கையை மீறி இருநூறுக்கும் மேற்பட்ட மக்களை ஒன்று திரட்டி சவக்காலை பெருநாள் நிகழ்வை நேற்று நடத்திய முன்னெடுத்த பங்குத்தந்தை உட்பட்ட மூவர் திருகோணமலையில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

திருகோணமலை பாலையூற்று பிரதேசத்தில் உள்ள சவக்காலையிலேயே இந்தப் பெருநாள் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனை அடுத்து அங்கு சென்ற பொதுச் சுகாதார உத்தியோகத்தர் மற்றும் பொலிஸார் பங்குத்தந்தை உட்பட்ட மூவரை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

பங்குத்தந்தையர்கள் இல்லத்திலேயே அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

(ஐ)

# ராஜித சேனாரத்ன குடும்பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டு விடுவிப்பு

கொழும்பு, நவ. 03

ராஜித சேனாரத்ன எம்.பி. தனது குடும்பத்தினருடன் தனிமைப்படுத்தலின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்ட காலத்தில் இவர்கள் மாகாணத்தில் இருந்து வெளியில் சென்ற காரணத்தினால் அவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது கொழும்பு திரும்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பி.சி.ஆர்...

முடக்கத் தீர்மானித்துள்ளமைக்க மைய தொற்றுக்குள்ளானவர்களை இலகுவாக இனங்காணக்கூடிய தாக இருக்கும் என்பதோடு, ஏனைய பகுதிகளுக்கும் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

ஊரடங்குச் சட்டம் தொடர்பில் தனிநபரால் தீர்மானங்கள் எடுக்கப்படுவதில்லை. ஏதேனுமொரு பிரதேசத்தில் தொற்றாளர் இனங்காணப்படுதல் மற்றும் அவர் தொடர்புகளைப் பேணியமை தொடர்பில் ஆராயப்பட்டு அதன் பின்னரே தனிமைப்படுத்தல் அல்லது ஊரடங்குச் சட்டம் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 179 தொற்றாளர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே இனங்காணப்பட்டனர். கொழும்பில் 93 பேரும் களுத்துறையில் 33 பேரும் இனங்காணப்பட்டனர். இவற்றுக்கு மேலதிகமாக பேலியகொடை, குருநாகல் மற்றும் குளியாபிட்டியில் தொற்றாளர் இனங்காணப்பட்டனர்.

இவற்றின் அடிப்படையில் அவதானிக்கும் போது மேல் மாகாணத்திலிலேயே அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்தோடு சுமார் 3 நாள்களின் பின்னர் தாமதமாகத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலைமையும் காணப்படுகிறது. இவ்வாறான அனைத்து நிலவரங்களையும் கவனத்தில் கொண்டே ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலில் ஒருவார காலத்துக்கு நாடளாவிய ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்படுவது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு பிறப்பித்தால் மிக இலகுவாக வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று சிலர் எண்ணக்கூடும். எனினும் அனைத்து மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டே இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள பகுதிகளில் மக்களுக்கு கடந்த மார்ச் தொடக்கம் மே மாதம் வரை பின்பற்றியதைப் போன்று நடமாடும் பொருள் விற்பனை நிலையம் மூலம் அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுவோர் நிச்சயம் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றோம்- என்றார். (எ)

## தமிழ்த் தேசிய...

அலுவலகத்தில் நின்ற செயற்பாட்டாளர்களின் பெயர் விவரங்கள் பொலிஸாரால் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கூடிக்...

பாணந்துறையைச் சேர்ந்த 27 வயது நபரொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் அவரது உடலிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளைப் பரிசோதனை செய்ததில் அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தமை உறுதிப் படுத்தப்பட்டது.

இதனையடுத்தே இந்த மரணம் 22 ஆவது கொரோனா மரணமாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசு...

இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது எனத் தெரிவித்தவர்கள், தற்போது ஏற்பட்டுள்ள வைரஸ் பரவலுக்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆட்சியாளர்கள் நாட்டில் நன்மையான விடயங்கள் இடம்பெற்றால் அதற்கு காரணம் தாம் என்றும், ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் அதற்குக் காரணம் மக்கள் எனவும் பழிசுமத்தும் குணம் கொண்டவர்களாகவே உள்ளனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்காமலிருந்தனர்.

அதனால் மீண்டும் வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் எம்மைப் பொறுத்தவரையில் கொரோனாவைப் போன்று 20 ஆவது திருத்தமும் ஒரு வைரஸ் தொற்றாகும்.

வைரஸ் பரவலால் 15 இலட்சம் பேருக்கு தொழில் இல்லாமல் போயுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் வாழ்வாதாரப் பிரச்னைகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் தருணத்தில் நாட்டுக்குப் பயன்தரும் செயல்பாடுகளை அரசாங்கம் செய்யா விட்டாலும், நாடு பூராகவும் வைரஸை பரப்பியுள்ளது- என்றார். (எ)

## நூற்றுக்கணக்கான..

மக்கள் கடற்கரைக்கு வந்து இவற்றைப் பார்த்துச் சென்றனர்.

இதேபோன்று பல ஆண்டுகளுக்கு முன்பு சம்பூரில் நூற்றுக்கணக்கான திமிங்கிலங்கள் கரையொதுங்கின என்று கடல்வாழ் உயிரினங்கள் குறித்து ஆய்வு செய்யும் உயிரியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பாராளுமன்றத்துக்கு...

20 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்திருக்கும் நிலையில் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள பஸில் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதைக் கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

ஆளும் கட்சி உறுப்பினரான ஜயந்த கொட்டகொட தனது பதவியை இராஜினாமா செய்து பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பதற்கு வழிவகுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு பதவியேற்கும் பட்சத்தில் எதிர்பரும் புதன்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சுப் பதவியும் பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினரான ஹர்ஷா டி சில்வா நேற்று மாலை வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவு ஒன்றிலும் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

நாளை அல்லது சில தினங்களில் பஸில் பதவியேற்பார் என ஹர்ஷா தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## நான்கு...

பட்டுள்ளது.

அந்தப் பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரத்தைக் கருத்திற் கொண்டு மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## புதுக்குடியிருப்பில்...

தொற்றாளர்கள் இனங்காணப் பட்டனர்.

தொற்றுக்கு இலக்கான இரு வரும் பேலியகொடை மீன் சந்தைக்கு சென்று வந்தவர்கள். இதனால், இவர்கள் அப்பகுதி சுகாதார உத்தியோகத்தர்களால் புதுக்குடியிருப்பு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப் பட்டிருந்த நிலையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## முதல் கொரோனா...

ஹோட்டலில் பணியாற்றும் பணியாளருக்கே கொரோனா தோற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரது உணவக உரிமையாளருக்கு கொரோனா தோற்று உள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்ட நிலையில் அங்கு பணியாற்றி ஊழியருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை யிலேயே கோவிட் -19 தொற்று நோய் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சி திரும்பிய அவர், சுய தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரியின் சாதூரியமான செயற்பாட்டால் கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரது உறவினர் ஒருவர் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் நிலையில் அவர் கடந்த மூன்று தினங்களாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Eelanadu ஈழநாடு
03.11.2020 செவ்வாய்க்கிழமை
சார்வாரி, ஐப்பசி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழர்களின் ‘தேசிய உணர்வு’

இலட்சிய இனவாதி என்று வர்ணிக்கப்படும் சிங்கள தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர், வைத்தியர் குணதாச அமரசேகர, சிங்கள மக்களுக்கு தேசிய உணர்வு இல்லை என்று தெரிவித்திருக்கிறார். இவ்வாறு தெரிவித்திருக்கும் குணதாச, ‘சிங்கள மக்களை ஒன்றுபடுத்த முடியாமல் போயிருக்கின்றது. சிங்கள மக்கள் ஒன்றிணையாவிட்டால் நாட்டிற்கு எதிர்காலம் இல்லை’ என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். கோட்டாபய ராஜபக்ஷ தனிச் சிங்கள ஆதரவில் வெற்றிபெற்றதை சிங்கள - பௌத்த எழுச்சியாக கொண்டாடிய சிங்களவாதிகள், 20 ஆவது திருத்தச் சட்டத்தை முஸ்லிம்களின் ஆதரவுடன் நிறைவேற்றியமை தொடர்பில் அதிருப்தியடைந்திருக்கின்றனர். இதனைத்தான், குணதாச அமரசேகர வெளிப்படுத்தியிருக்கின்றார். 20ஆவது திருத்தச் சட்டம் தனிச் சிங்கள ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே சிங்களவாதிகளின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு பெறப்பட்டதை சிங்களவர்களின் தோல்வியாகவே அவர்கள் பார்க்கின்றனர். இதன் காரணமாகவே 20ஆவது திருத்தத்தை ஆதரித்த முஸ்லிம்களுக்கு அரசாங்கத்தில் இடம் வழங்கினால் தாம் வெளியேறப் போவதாக சில பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கோட்டாபயவின் வெற்றி, அதனைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் வெற்றி ஆகியவற்றால் சிங்கள - பௌத்த தேசியவாதம் எழுச்சியுற்றது. வரலாற்றில் மீளவும் சிங்கள -பௌத்த வாதம் தலைதூக்குவதற்கான ஓர் அரிய வாய்ப்பாகவே இதனை சிங்கள தரப்புக்கள் உற்று நோக்கின. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொணர்ந்து, அதன் மூலம் சிங்கள - பௌத்தத்தை அரசியல் ரீதியில் மேலும் பலப்படுத்திக் கொள்ளவே அவர்கள் விரும்பினர். இதன் காரணமாகவே 20ஆவது திருத்தச் சட்டத்தை விட்டுவிட்டு, நேரடியாக புதிய அரசியல் யாப்பிற்கு செல்லவேண்டும் என்னும் கருத்தை குணதாச அமரசேகர போன்றவர்கள் வலியுறுத்தி வந்தனர். ஆனால், முஸ்லிம்களின் ஆதரவுடன் 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமையானது, சிங்கள - பௌத்தவாதிகளைப் பொறுத்தவரையில் ஒரு பின்னடைவாகும்.

உண்மையில், ஒப்பீட்டடிப்படையில் சிங்கள மக்கள் ஓரணியில்தான் நிற்கின்றனர். கடந்த கால நிலைமைகளோடு ஒப்பிட்டால் சிங்கள - பௌத்த தேசியவாதம் ஒரு பலமாக திரட்சி பெற்றிருக்கின்றது. ஆனால், தமிழ்ச் சூழலிலோ தமிழ்த் தேசியவாதம் ஒப்பீட்டடிப்படையில் வீழ்சியடைந்திருக்கின்றது. கூட்டமைப்பிற்கு மாற்றான தமிழ்த் தேசிய தரப்பிலிருந்து மூவர் பாராளுமன்றம் சென்றிருந்தாலும்கூட, வடக்கு, கிழக்கு தழுவிய தமிழ் கூட்டுணர்வு, என்னும் நிலையில் சிந்தித்தால், தமிழர்கள் ஓரணியில் இல்லை. தமிழரின் ஜனநாயக பலம் ஒன்றாக திரட்சி பெறவில்லை. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பார்கள். அவ்வாறானதொரு மிடுக்கை தமிழர்கள் மத்தியில் காணவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் மக்களின் தேசிய உணர்வு தொடர்பில் சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கின்றது. தமிழர்களிடம் தமிழ்த் தேசிய உணர்வு இல்லையா என்னும் கேள்வியையே முன்வைக்க வேண்டியிருக்கின்றது.

இன்றிருக்கும் தமிழ் சமூகம்தான் 2009இற்கு முன்னரும் இருந்தது. இன்றிருக்கும் அனைத்துப் பிரச்னைகளும் அப்போதும் இருந்தன. ஆனால், அப்போது இப்படியானதொரு நிலைமை இருக்கவில்லை. அப்போதிருந்த அரசியல் சூழல் ஏதோவொரு வகையில் தமிழ் மக்களை தமிழ்த் தேசிய உணர்வு நிலைக்குள் கட்டிப்போட்டிருந்தது. ஆனால், 2009இற்கு பின்னர்தான் எல்லாமே தலைகீழானது. இதற்கு என்ன காரணம்...? 2009இற்கு பின்னர் தமிழ் மக்களை, தமிழ்த் தேசிய உணர்வு நிலைக்குள் கட்டிப்போடக்கூடிய தலைமை ஒன்று இருக்கவில்லையா? சிங்கள மக்களுக்கு ஒரு வலுவான தலைமையிருப்பதால் அவர்கள் ஒரு மக்கள் பலமாக, திரட்சி பெற்றிருக்கின்றனர் ஆனால், தமிழ் மக்களுக்கு சரியானதொரு தீர்க்கதரிசனமுள்ள தலைமை இல்லாமையால் தமிழ் மக்கள் ஓரணியாக இல்லை. இந்த முடிவுக்குத் தானே வரமுடியும்!



# தமிழின் பெருமையையும் பாரதியின் சிறப்பையும் வானுயர வைத்த இந்திய பிரதமர் மோடி!

- அலசுவது இராஜதந்திரி -

இந்தியாவின் ஒற்றுமை தினமாக அனுஷ்டிக்கப்படுவது, சுதந்திர இந்தியாவின் துணைப் பிரதமராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேலுடைய நினைவு தினமாகும். சுதந்திரத்துக்குப் பின்னர் இந்தியா இன ரீதியாகவும், மொழி ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் பிளவுபடக்கூடாது என்பதில் தீவிர அக்கறை கொண்டு, இந்தியாவின் ஒற்றுமையை சர்தார் வல்லபாய் பட்டேல் நிலை நிறுத்தினார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி குஜராத் மாநிலத்தில் நர்மதா ஆற்றங்கரையருகே அமைந்துள்ள இரும்பினாலான சர்தார் வல்லபாய் பட்டேலின் 597அடி உயரமான சிலை அடிவாரத்திலே பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் ஒற்றுமை தினத்தை கொண்டாடினார்.

2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி சர்தார் வல்லபாய் பட்டேலின் சிறை திறந்து வைக்கப்படும்வரை, இந்தியாவில் அதி உயரமான சிலையாக திருவள்ளுவரின் சிலையே காணப்பட்டது. தமிழறிஞரும், தமிழக முதலமைச்சராகவுமிருந்த கலைஞர் மு. கருணாநிதியின் நெறிப்படுத்தலில் கருங்கல்லினால் திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிக்கும் விதத்தில் 133 அடி உயரத்தில், கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் சிலை மிகப்பிரமாண்டமான முறையில் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவின் உயரமான சிலைகள்**

எனவே, கருங்கல்லினாலான 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை விட, 464 அடி உயரத்தைக் கொண்டதாக சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலை காணப்படுகின்றது. 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலை திறந்து வைக்கப்பட்ட தினத்திலிருந்து ஆண்டுதோறும் இந்திய ஒற்றுமை தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இரு தினங்களுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலைக்கு அஞ்சலி செலுத்திய நிகழ்வு, பிரதமர் மோடி சர்தார் பட்டேலின் வழிநின்று எவ்வளவு தூரம் இந்தியாவின் ஒற்றுமையை சிரமேல் வைத்துப் போற்றுகின்றார் என்பதற்கு சான்று பகிர்வதாக அமைந்திருந்தது. பலமொழிகள் பேசப்பட்டு, பல இனத்தவர்கள் வாழ்கின்ற இந்தியாவில், தமிழின் பெருமையை வானுயரக்கொண்டு சென்று, சர்தார் வல்லபாய் சிலை அடிவாரத்தில் நிகழ்ந்த இந்திய ஒற்றுமை தினத்தில் பிரதமர் மோடி உரை நிகழ்தியிருந்தார். பலமொழிகள் பேசப்படுகின்ற இந்தியாவில், தமிழே உலகின் மிகப் பழமையான மொழி என்ற உண்மையை ஆணித்தரமாக பிரதமர் நரேந்திர மோடி எடுத்துரைத்ததன் மூலம், எவ்வளவு தூரம் தம்மை அவர் இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த தலைவராக அடையாளப்படுத்தியுள்ளார் என்பதை அவதானிக்கமுடிகின்றது.

**பாரதியார் கவிதை**

இதுதவிர, சர்தார் வல்லபாய் பட்டேல் வைபவத்தில் தமிழைக் கௌரவிக்கும் விதத்தில் பிரதமர் மோடி குறிப்பிட்ட மற்றுமொரு விடயமே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இந்தியாவின் தரைத்தோற்றம் மூலமாக இந்தியாவின் ஒற்றுமையை வலியுறுத்திப் பாடிய பாடலைக் குறிப்பிட்டமையாகும். பிரதமர் மோடி குறிப்பிட்ட பாரதி பாடல் இதுவேயாகும்:

“மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநில மீததுபோல் பிறி தில்லையே
இன்னறு நீர் கங்கை ஆறு எங்கள் ஆறே
இங்கிதன் மாண்பிற்கு எதிர் ஏது வேறே?
பன்னரும் உபநிட நூல் எங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இதை எமக்கில்லை ஈடே!”

தற்போது இந்தியாவும், சீனாவும் ஒன்றுடனொன்று லடாக் மலைப் பிரதேசத்தில் எல்லைத் தகராறு காரணமாக முறுகல் நிலையிலுள்ளன.

**உயர்வான நல்ல தேசத்தலைவர்**

ஆயினும், ஒரு வருடத்துக்கு முன்னர் சீனத் தலைவர் ஷி ஜிங் பிங் இந்தியா வந்தபோது தமிழ்நாட்டையே சீனத் தலைவரது சுற்றுலாத் தலமாக பிரதமதர் மோடி தெரிந்தெடுத்திருந்தார்.

தமிழகத்தை சீனத் தலைவரின் சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுத்தமைக்கு, பல்லவர் ஆட்சியில் தமிழகம் ஊடாக சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையேயிருந்த தொடர்பைக் கூட பிரதமர் மோடி நன்கறிந்திருந்தார் என்பதையே அறியமுடிகின்றது.

இதுதவிர, தமிழர்களின் நிர்வாகத்திறன், ஆளுமை என்பவற்றில் மோடிக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதன் காரணமாக தமது அமைச்சரவையில் பிரதமர் மோடி முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை தமிழர்களுக்கே வழங்கியுள்ளார். பிரதமர் மோடியின் அமைச்சரவையில் நிதி அமைச்சராக நிர்மலா சீதா ராமனும், வெளிவிவகார அமைச்சராக ஜெய்சங்கரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன, மத பூசல்களால் அல்லல்படும் இன்றைய உலகில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி சகல பேதங்களுக்கும் அப்பாற்பட்ட விதத்தில், எவ்வாறு ஓர் உயர்வான தேசத் தலைவராக இருக்க முடியுமென்பதற்கு நல்ல உதாரணமாக விளங்குகின்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




செய்திகள்

# சிங்கள மக்களிடம் இப்போது தேசிய உணர்வு கிடையாது

## குணதாச அமரசேகர கூறுகிறார்

கொழும்பு, நவ 03

எமது சிங்கள மக்களுக்கு தேசிய உணர்வு கிடையாது. காரணம் எதுவாக இருந்தாலும் எமது தேசிய அமைப்பின் எதிர்ப்பார்ப்பு இன்னும் நிறைவேறவில்லை. சிங்கள மக்களை ஒன்றிணைக்க முடியாது போயுள்ளது. சிங்கள மக்கள் ஒன்றிணையாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. சிங்கள அமைப்புகளுக்கு சிங்கள மக்கள் மற்றும் தேசியம் தொடர்பான உணர்வு இருக்கவேண்டும் என சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.



ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு எந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரவளித்தாலும் அவர்களில் எவரையும் அரசின் வேலைத்திட்டத்துடன் இணைத்துக் கொள்ளக்கூடாது என்பது பிரதான விடயம். அவர்கள் ஏதேனும் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அரசுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கலாம். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைத்துக்கொண்டால், அரசில் இருந்து விலகப் போவதாக சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

நாங்களும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ளோம். வாக்களித்தாலும் அவர்களை அரசுடன் இணைத்துக்கொள்ளக் கூடாது.

அரசு இது தொடர்பாக கடுமையான தீர்மானத்தில் இருக்க வேண்டும். வாக்களித்தாலும் அவர்களுக்கு எந்த அதிகாரத்தையும் வழங்கக்கூடாது. அமைச்சர் பதவி, அமைப்பாளர்கள் பதவிகள் என எதனையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது.

எமது சிங்கள மக்களுக்கு தேசிய உணர்வு கிடையாது. காரணம் எதுவாக இருந்தாலும் எமது தேசிய அமைப்பின் எதிர்ப்பார்ப்பு இன்னும் நிறைவேறவில்லை-என்றார்.

# வடமாகாணத்தில் இதுவரை 59 கொரோனா நோயாளிகள்

## மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் தகவல்




**யாழ்ப்பாணம், நவ.03**

**வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று ஆரம்பித்த மார்ச் மாதத்தில் இருந்து இன்று வரை 59 கொரோனா நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று ஆரம்பித்த மார்ச் மாதத்தில் இருந்து இன்று வரை 59 கொரோனா நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மார்ச் முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 18 நோயாளர்களும் ஒக்ரோபர் மாதத்தில் 41 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 தொற்றாளர்களும், வவுனியா மாவட்டத்தில் 14 தொற்றாளர்களும், மன்னார் மாவட்டத்தில் 10 நோயாளர்களும் முல்லைத்தீவில் 2 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களில் வடக்கு மாகாணத்தில் புதிதாக எவரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை.

யாழ். போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகளில் கடந்த சனிக்கிழமை 378பேரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று முன் தினம் 385 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் தனிமைப்படுத்தல் முகாம்களில்,சிகிச்சை நிலையத்தில் இருந்தவர்கள் சிலருக்கு மட்டுமே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

புதிதாக வடக்கு மாகாணத்தில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. இருந்தாலும் கடந்த வாரத்தில் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்களை இனங்கண்டு அவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களுக்கான பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

வட மாகாணத்தை பொறுத்தவரை தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பாஷையூர் மேற்கு, திருநகர் கிராமங்கள், அதேபோல கரவெட்டி ராஜகிராமம் பிரிவிலும் 4 கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. மருதங்கேணி கொரோனா சிகிச்சை நிலையம் கடந்த 19ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்திருந்தது. 50 நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்திருந்தார்கள். இவர்களில் முதலாவது தொகுதியாக 16 பேர் இரண்டு வார கால சிகிச்சை நிறைவு செய்து நேற்று வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல கிளிநொச்சியில் கிருஸ்ணபுரத்திலும் முல்லைத்தீவில் மாங்குளத்திலும் இந்த வாரத்தில் சிகிச்சை நிலையங்கள் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இலங்கை முழுவதும் இந்த கொரோனா தொற்று மிக தீவிரமாகப் பரவி வருவதை நாங்கள் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தற்போது பரவி வரும் இந்த வைரஸ் மிகவும் வீரியம் மிக்கது. அதன் நோயின் தாக்கமும் அதிகமாக காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் இந்த தொற்று பரவலில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு இரண்டு விடயங்களைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இயலுமானவரை ஒன்று கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அதற்காக கடந்த வாரம் யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற செயலணி கூட்டத்தின்போது பொதுமக்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கான பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றை நாங்கள் இறுக்கமாகப் பின்பற்றவேண்டும்.அதாவது முகக்கவசம், சமூக இடைவெளி மற்றும் கை கழுவுதல் போன்ற சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றினால் இந்த கொரோனா தொற்று பரம்பலை கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும்- என்றார்.

# தூசுத் துகள்களின் செறிவு வளிமண்டலத்தில் அதிகம்

## சுவாச நோயாளர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ.03

நாட்டின் வளிமண்டலத்தில் தூசுத் துகள்களின் செறிவு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய தென் மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் தூசுத் துகள்களின் செறிவு அதிகரித்துள்ளதாக ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட நிபுணர் பேராசிரியர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடந்த மாதம் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தூசுத் துகள்களின் செறிவு 100 முதல் 150 ஆக அதிகரித்துள்ளதாகவும் இதனால் சுவாச நோயாளர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் கேட்டுள்ளார்.

இலங்கைக்கு அண்மைய நாடான இந்தியாவில் ஏற்பட்ட வளி மாசடைவு மற்றும் நாட்டின் வளிமண்டல எல்லைப் பகுதியில் ஏற்பட்ட மாசடைவு ஆகியன இதற்கு காரணம் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

# தனிமைப்படுத்தலில் இதுவரை 67,000 பேர்!

கொழும்பு, நவ 03

இலங்கை முழுவதும் கொரோனா தொற்று சந்தேகத்தில் இதுவரை 25 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 67 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண எச்சரித்தார்.








# மின்தறி உற்பத்தி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், நவ 03

தொழில்துறைத் திணைக்களத்தினால் தும்பளை தெற்கு, பருத்தித்துறையில் புதிதாக அமைக்கப்பட்ட மின்தறி உற்பத்தி நிலையக் கட்டடம் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வார்பிள்ளை சிறி ஆகியோரால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், கணக்காளர் ப.காண்டீபன், மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பருத்தித்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், நெசவாளர்கள், மற்றும் பிரதேச ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

செய்திகள்

# வரவு பதிவுசெய்யும் கருவியால் கொரோனா பரவும் என அச்சம்!

## அரச உத்தியோகத்தர்கள் கவலை

யாழ்ப்பாணம், நவ.03

**யாழ். மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் வரவைப் பதிவு செய்வதற்கு தற்போதும் கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் கருவி பயன்படுத்தப்படுவது குறித்து உத்தியோகத்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

கொரோனா வைரஸ் அதிகமாக பரவிவரும் நிலையில் இவ்வாறான கைவிரல் அடையாளம் பதிவு செய்தல் தமக்கு பாதிப்பாக அமைகின்றது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். யாராவது ஒரு உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று இருக்கும் பட்சத்தில் அது அனைவரையும் பாதிக்கும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

'கடந்த யுத்த காலத்தில்கூட எந்தவித அச்சமும் இன்றி நாம் பணியாற்றினோம். அப்போது வரவுப் பதிவேடு மாத்திரமே இருந்தது. நிர்வாக உத்தியோகத்தர்கள் காலை 9.00 மணிக்கும் மதியம் 12.30 மணிக்கும் சிவப்பு அடிக்கோடிடுவர். இதன்மூலம் நேர்த்தியாக வரவு பதிவுசெய்யப்பட்டது' எனவும் உத்தியோகத்தர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்படும் வரை கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரங்களை நிறுத்தி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3)




# முகக்கவசங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.03

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி முகக்கவசங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

பருத்தித்துறை வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி வே.கமலநாதனிடம் நேற்று இவை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

கொரோனா இரண்டாவது அலை தாக்கம் அதிகரித்துக் கொண்டு வரும் இந்தக் காலப்பகுதியில் லயன்ஸ் கழகத்தினரால் பல்வேறு பட்ட பொதுவேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3)

# மேலும் 344 பேர் குணமடைவு

கொழும்பு, நவ.03

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 344 பேர் குணமடைந்துள்ளனர் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 5,249 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 11 ஆயிரத்து 60 பேரில் 5,789 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அத்தோடு 405 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளத்துடன் கொரோனா தொற்றினால் இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 8 மருத்துவர்கள் உட்பட 115 பேருக்கு சப்ரகமுவ மாகாணத்தில் கொரோனா

கொழும்பு, நவ 03

சப்ரகமுவ மாகாணத்தில் துரிதமாக கொரோனா தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் இந்தப் பிரதேசத்தில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த கடுமையான சட்டங்களை நடைமுறைபடுத்த இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களின் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணிகள் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண தொற்று நோய் வைத்தியப் பிரிவின் அதிகாரி லக்மால் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக கேகாலை மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளதுடன் இவர்களில் 8 பேர் மருத்துவர்கள் ஆக இருப்பது அவதானத்துக்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் அவதானத்துக்குரிய இடங்கள் கடுமையான சட்டங்களுடன் பயணக் கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் 49 பேர் கொரோனா நோயாளர்களாக சிகிச்சை பெற்று வருகின்றனர். சப்ரகமுவ மாகாணத்தின் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 115 ஆக அதிகரித்துள்ளனர். (அ)

# கடும் சுகாதார ஏற்பாடுகளுடன் இன்று கூடுகிறது பாராளுமன்று

கொழும்பு, நவ.03

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றம் இன்று இரண்டு மணிநேரம் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு புதிய விதிமுறைகளை முன்வைப்பார். வேறு நடவடிக்கைகள் இடம்பெறாது. சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியிலேயே நடவடிக்கைகள் இடம்பெறும்.

முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரையே சபை அமர்வு இடம்பெறும்.

இதேவேளை, பாராளுமன்ற வரலாற்றில் அமர்வுகளின்போது முதல்முறையாக இன்று செய்தி சேகரிப்புக்காக ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என தெரியவந்துள்ளது.

# பொரளை பொலிஸ் நிலையத்தில் மேலும் 9 பேருக்கு கொரோனா

கொழும்பு,நவ.03

கொழும்பு பொரளை பொலிஸ் நிலையத்தில் மேலும் 09 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்கள் நேற்றுக்காலை களுத்துறையிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (எ)

# மாநகரத்துக்குட்பட்ட உணவகங்களில் அமர்ந்து உணவருந்துவதை முற்றாக இடைநிறுத்துங்கள்

## முதல்வர் ஆனல்ட் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், நவ.03

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட உணவகங்கள், குளிர்பானச்சாலைகள் மற்றும் உணவு விற்பனை செய்யும் திறந்த வெளி உணவகங்களில் அமர்ந்து உணவருந்துதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்படுகின்றது என யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் அதிகரித்துவரும் கொவிட் 19 தாக்கத்திலிருந்து நாம் பாதுகாப்புடன் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது மிகுந்த அவசியமாகும். அந்த வகையில் சமூக இடைவெளி, முகக் கவசம் அணித்தல் மற்றும் கைகளை அடிக்கடி தொற்று நீக்கிகளைக் கொண்டு சுத்தம் செய்தல் போன்றவை அவசியமாக நாம் பின்பற்றவேண்டிய சுகாதார நடைமுறைகளாகும்.

இதற்கு மேலதிகமாக யாழ் மாவட்ட கொவிட் 19 தடுப்பு உயர் மட்ட செயலணியின் தீர்மானங்களுக்கு அமைவாக யாழ் மாநகர எல்லைக்குற்பட்ட உணவகங்கள், குளிர்பானசாலைகள் மற்றும் உணவு விற்பனை செய்யும் திறந்த வெளி உணவகங்களில் அமர்ந்து உணவருந்துதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்படுகின்றது.

உணவகங்களில் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உண்பதற்கு உணவுகளை விநியோகிக்க வேண்டமென உணவக உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் உணவுகளை பொதி செய்து மாத்திரம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் உணவகங்களில் அமர்ந்து உணவருந்துவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொது மக்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

கொவிட் 19 வைரஸ் தாக்கம் பரவலில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதனை அலட்சியம் செய்து உணவகங்களில் அமர்ந்து உண்பதற்கு உணவுகளை விநியோகம் செய்யும் உணவகங்கள் யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினரினால் அடையாளப்படுத்தப்படுமிடத்து உரிய கடை உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், உணவகங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

இது குறித்து மிகுந்த அவதானமாக செயற்படுமாறு பொது மக்களும், உணவக உரிமையாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இதனை நடைமுறைக்கு கொண்டு வருவதன் ஊடாக மக்கள் அதிகளவில் கடைகளில் தரித்திருப்பதை ஓரளவுக்கு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். பொது மக்களின் பாதுகாப்பு கருதி எம்மால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்மாறு கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ-3)

செய்திகள்

# வடக்கு மாகாணத்தில் அனைவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்

## மாகாண ஆளுநர் வேண்டுகோள்



**யாழ்ப்பாணம், நவ.03**

**வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தினுள் கடற்பரப்பின் ஊடாக அத்து மீறி நுழைபவர்களைத் தடுப்பதற்காக கடற்படையினர் சிறப்பு சுற்றுக்காவல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தகைய கடலோரப் பாதுகாப்பையும் கடந்து யாராவது அத்துமீறி உள்நுழைவார்களாயின் அல்லது உள்நுழைந்து மறைந்திருப்பார்களாயின் கரையோர வாழ் வடபிராந்திய மக்கள் உட்பட, எவராவது அருகில் உள்ள பொதுச் சுகாதார அதிகாரிகளிடத்திலோ அல்லது பொலிஸ் நிலையத்திற்கோ தகவல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அத்துடன் அண்மைய நாள்களில் வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்கள் தங்களைத் தாங்களே வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குவது அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி அவர்களின் உடல்நிலையில் மாறுபட்ட அடையாளங்களை காணுமிடத்து உடனடியாக மருத்துவ பரிசோதனைகளுக்கு தங்களை ஈடுபடுத்துவதே பொருத்தமானதாகும்.

யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்திலும், பி.சி.ஆர். பரிசோதனைகள் கிரமமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே பொதுமக்கள் இயல்பான சந்தேகங்கள் ஏற்படுமிடத்து எவ்விதமான அச்சமும் அடையாது பரிசோதனைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள முடியும்.

இதைவிட, அனைத்து பொதுமக்களும் பொதுவெளியில் நடமாடுவதை இயன்றளவில் தவிர்ப்பதுடன், முகக்கவசம் அணிதல், கைசுத்திகரிப்பு திரவத்தினை பயன்படுத்தல், சமூக இடைவெளிகளைப் பேணுதல் ஆகிய மூன்று விடயங்களையும் பின்பற்றுதலும் அவசியமானதாகின்றது.

சமூகப் பொறுப்புடன் வடக்கு வாழ் ஒவ்வொரு குடிமகனும் நடந்து கொள்வதுடன் மக்கள் கூடும் இடங்களில் பொலிஸார் மற்றும் பொதுசுகாதரப் பணியாளர்கள் சிறப்புக் கவனம் கொண்டிருப்பதும் அவசியமாகின்றது. அதற்குரிய அறிவுத்தல்களையும் நான் வழங்கியுள்ளேன்.

மங்கல, அமங்கல நிகழ்வுகளின் போது வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுவது அவசியமாகின்றது. அத்துடன் அத்தியாவசியப் பொருள்களுக்கு திட்டமிட்டு தட்டுப்பாடுகளை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது முக்கியமான விடயமாகின்றது -என்றுள்ளது.

# கொரோனாவை கட்டுப்படுத்த தவறிவிட்டார் வடக்கு ஆளுநர்

## அனந்தி சசிதரன் குற்றச்சாட்டு



*யாழ்ப்பாணம், நவ.03*

“வடக்கு மாகாணத்தில் கொரோனா தாக்கம் தீவிரமடைந்துள்ள நிலையில் வடக்கு ஆளுநர் இது தொடர்பில் எந்தவித அக்கறையும் செலுத்தவில்லை. சுகாதார அமைச்சும் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.”

-இவ்வாறு குற்றம்சாட்டினார் ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் அனந்தி சசிதரன்.

யாழ்ப்பாண ஊடக மன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா தீவிரமடைந்துள்ள நிலையில் அது தொடர்பான வேலைத்திட்டங்களுக்கு இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் அரசு, அந்த வேலைத் திட்டம் தொடர்பில் சரியான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

கடந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரின்போது செய்தி சேகரித்த ஊடகவியலாளர்கள் தனிமைப்படுத்தப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரும் தனிமைப்படுத்தப்படவேண்டும். இது தொடர்பான சரியான விளக்கத்தை அரசு வழங்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளராக மாவை சேனாதிராசா நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர். இவ்வாறான தெரிவுகள் தொடர்ந்தும் இருப்பின் மக்களின் தேவைகளைக் கூட்டமைப்பு எவ்வாறு நிறைவேற்றப் போகிறது-என்றார். (அ-3)

# ஊரடங்குவேளை பிறந்தநாளுக்கு கொழும்பு சென்று திரும்பிய திருமலை மருத்துவருக்கு கொரோனா!

*திருமலை, நவ 03*

திருகோணமலை பொது வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர் அம்புலன்ஸை பயன்படுத்தி கொழும்பில் உள்ள தனது தாயாரின் பிறந்தநாளுக்கு சென்று திரும்பிய நிலையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த மருத்துவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் பணியாற்றி வருகிறார். கொழும்பு உட்பட்ட மேல் மாகாணம் முழுமையாக ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நிலையில், அந்த மருத்துவர் அம்புலன்ஸைப் பயன்படுத்தி கொழும்பில் உள்ள தன் தாயாரின் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குச் சென்று திரும்பியிருக்கின்றார்.

அங்கிருந்து வந்த மருத்துவர், வைத்தியசாலை விடுதியில் கொரோனா அறிகுறிகளுடன் தங்கியிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரை கொழும்பு மஹரகமவில் உள்ள தொற்றுநோயியல் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அவருக்கு கொரோனா அறிகுறி காணப்பட்ட நிலையிலும் அவருடன் ஒரே அறையில் தங்கியிருக்கும் மற்றொரு மருத்துவர் திருகோணமலை பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளுக்கு சென்று நோயாளர்களை பார்வையிட்டுள்ளார்.

அவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# இந்தியத் தூதரகத்தின் ஊழியருக்கும் தொற்று

*கொழும்பு, நவ 03*

இந்திய தூதரகத்தின் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தியத் தூதரகத்தின் துணைப் பணியாளர் ஒருவரே கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவர் இலங்கை அரசால் ஒதுக்கப்பட்ட பகுதியில் மருத்துவ கிசிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என தூதரகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட ஊழியரின் பணி காரணமாக அவர் தூதரக அலுவலகத்துடனும் அதிகாரிகளுடனும் சிறியளவிலேயே தொடர்பிலிருந்தார் என தெரிவித்துள்ள தூதரகம், அவருடன் தொடர்பிலிருந்த மிககுறைந்த எண்ணிக்கையிலானவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உருவாகியுள்ள சூழ்நிலை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான ஊழியர்களுடனேயே சில வாரங்களாக இயங்கி வந்துள்ளதாகவும் தூதரகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

# வவுனியா மாவட்டத்தில் 347 குடும்பங்கள் தனிமை

*வவுனியா, நவ 03*

வவுனியா மாவட்டத்தில் *347* குடும்பங்களைச் சேர்ந்த *863* பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தாக்கம் மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் வீதி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட *14* பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து அவர்களுடன் வேலை செய்த மற்றும் தொடர்புகளை பேணியவர்கள், பிற மாவட்டங்களில் உள்ள கொரோனா தொற்றாளர்கள் சென்று வந்த இடங்களுக்குச் சென்று வந்தோர் என *347* குடும்பங்களைச் சேர்ந்த *863* பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், வவுனியா வடக்கில் *182* குடும்பங்களைச் சேர்ந்த *470* பேரும், செட்டிகுளம் பகுதியில் *12* குடும்பங்களைச் சேர்ந்த *38* பேரும், வவுனியாவில் *153* குடும்பங்களைச் சேர்ந்த *355* பேரும் இவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்-என்றார்.

# சுகாதார அமைச்சரும் அரசும் தோல்வி அடைந்தமை தெளிவு

## ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

*கொழும்பு, நவ 03*

சுகாதார அமைச்சரும் அரசும் தோல்வியுற்றமை தற்போது தெளிவாகியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தனது பதவியை ராஜினாமா செய்யவேண்டும் எனவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஒக்ரோபர் *4* ஆம் திகதி மினுவாங்கொடையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் ஒரு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டபோது, அரசு உடனடியாகச் செயல்பட்டிருந்தால், நாட்டின் தற்போதைய நிலைமை தவிர்க்கப்பட்டிருக்கும்.

இருப்பினும் அரசமைப்பின் *20* ஆவது திருத்தத்திற்கு அரசு முன்னுரிமை வழங்கி ஒக்ரோபர் *22* ஆம் திகதி வரை நாட்டை முடக்காமல் இருந்தது.



இதேவேளை, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்கள், உணவு மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்தோடு எந்தவித சமூகப் பரவல் இல்லை என தெரிவிக்கப்படும்போதும் இதுவரை கொரோனா தொற்று நோயாளிகள் பதிவாகாத ஒரே மாவட்டமாக கிளிநொச்சி மட்டுமே உள்ளது-என்றார்.

செய்திகள்

# நிபந்தனைகள் அடிப்படையில் பொருள்கள் விநியோகிக்கலாம்

கொழும்பு,நவ.03

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு விதிமுறைகளை உரியமுறையில் கடைப்பிடிக்க வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டிலுள்ள 18 பொலிஸ் பிரிவுகளில் எதிர்வரும் 9ஆம் திகதி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த 112 பொலிஸ் பிரிவுகளும், குளியாபிட்டியில் 5 பொலிஸ் பிரிவுகளும் உள்ளடங்குகின்றன. இவற்றைத்தவிர குருநாகல் மாநகர சபை எல்லையிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம் என்பதால் ஊரடங்கு உத்தரவு விதிமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

மேல் மாகாணத்தில் அத்தியாவசியப் பொருள்களை வீடுகளுக்கே விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை அமுலாக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சிலர் நிபந்தனைகளின் அடிப்படையில் பொருள்களை விநியோகிக்கலாம்.

இதுதொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தகவல்களைப் பெறமுடியும். 89 அரச நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள் தமது அலுவலக அடையாள அட்டைகளை ஊரடங்குச்சட்ட அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்தலாம்.

ஊரடங்கு அமுலாகும் காலப்பகுதியில் முடிந்தவரை பொதுமக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படாத பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வெளியே செல்லும் பட்சத்தில் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை அனுசரிப்பது கட்டாயமாகும். முகக்கவசம் அணியாமல் செல்வதும் சமூக இடைவெளியைப் பேணாமலிருப்பதும் தண்டனைக்குரிய குற்றம்-என்றார். (எ)

# கொரோனா 2ஆம் அலைக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு

## சாடுகிறார் ஹர்ஷன ராஜகருணா



**கொழும்பு,நவ.03**

**அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தலை நடத்த முயற்சித்து வந்ததால் கொரோனா வைரஸ் பரவலின் முதலாம் அலை ஏற்பட்டிருந்தது. அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் கொண்டிருந்த அதீத அக்கறையால் தற்போது வைரஸ் பரவல் இரண்டாம் அலை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா குற்றம்சாட்டியுள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மினுவாங்கொடை ஆடைத் தொழில்சாலையில் பணியாற்றிய பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது உறுதி செய்யப்பட்டதையடுத்து, மூன்று தினங்களுக்குள் தொற்றாளர்கள் ஆயிரம் பேர் வரை அடையாளம் காணப்பட்டனர்.

இதனால் கம்பஹா மாவட்டம் முழுவதும் உடன் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நானும் ,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினோம். கடந்த மாதம் 7ஆம் திகதியே நாங்கள் இந்த வேண்டுகோளை விடுத்திருந்த போதிலும், சுகாதார அமைச்சர், அதற்கு தற்போது அவசியமில்லை என்று எமது கோரிக்கையை நிராகரித்தார்.

நாங்கள் எச்சரிக்கை விடுத்த போதே ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தால் இன்று பேலியகொடை கொத்தணி என்று ஒன்று உருவாகியே இருந்திருக்காது.

அரசாங்கம் ஆரம்பத்தில் பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்காக அக்கறை கொண்டு செயற்பட்டதன் காரணமாகவே கொரோனா வைரஸ் பரவலின் முதலாம் அலை ஏற்பட்டது. பின்னர் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதில் அக்கறை செலுத்தி வந்ததால் தற்போது இரண்டாவது அலை ஏற்பட்டுள்ளது.

உரியநேரத்தில் உரிய தீர்மானங்களை அரசாங்கம் எடுப்பதில்லை. இதன் காரணமாகவே வைரஸ் பரவல் தீவிரமாகி வருகின்றது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவு, இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தொடர்ந்தும் கடுமையாக உழைத்து வருகின்ற போதிலும், அரசியல் ரீதியிலான தலையீடுகள் காரணமாகவே அதனை வெற்றி கொள்ள முடியாமலுள்ளது.

இதேவேளை, வைத்தியசாலைகளில் போதிய இடவசதிகள் இல்லை என்று வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டும் சிலர் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இந்த விடயம் தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைரஸ் பரவலுடன் தற்போது மனிதநேயமும் இல்லாமல் போயுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள ஒருவரை அழைத்துச் செல்லும் போது அவரை ஒரு பயங்கர வாதியை அழைத்துச் செல்வதைப் போன்றே அழைத்துச் செல்கின்றனர்.

இதனால் விஷேட தேவையுடைய இளைஞர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட அவரது தாயை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதையடுத்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதற்குப் பிரதான காரணம் எம்மிடம் மனிதநேயம் இல்லாமல் போயுள்ளமையே- என்றார். (எ)

# மன்னாரில் இதுவரை 12 பேருக்கு தொற்று

## மருத்துவர் வினோதன் தகவல்



மன்னார்,நவ.03

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 1083 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 12 பேர் கொரோனா தொற்றுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் கொரோனா தொற்றுள்ளவர்கள் 12 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் 10 பேர் பட்டித்தோட்டம் பகுதியில் கட்டட வேலை செய்தபோது தொற்றுள்ளவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளனர்.ஏனைய இரண்டு பேரும் பேலியகொடை கொரோனா கொத்தணியுடன் தொடர்புள்ளவர்கள். இவர்களில் 11 பேர் இரணவில சிகிச்சை நிலையத்துக்கும், ஒருவர் கந்தகாடு சிகிச்சை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் 9 பேர் தமது சிகிச்சைகளை நிறைவுசெய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். தற்போதுவரை மன்னார் மாவட்டத்தில் 1083 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் 767 பி.சி.ஆர். பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலையிலும், 316 பி.சி.ஆர். பரிசோதனைகள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைகளின் போது இந்த 12 பேரும் கொரோனா தொற்றுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

தற்போது தொற்றுடையவர்களுடன் தொடர்புள்ளவர்கள் என்ற அடிப்படையிலும் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள பிரதேசங்களிலிருந்து இங்கு வந்து தங்கியிருந்த நிலையில் 173 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் புதுக்குடியிருப்புப் பகுதியில் தொற்றுள்ள ஒருவருடன் தொடர்பிலிருந்த 33 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் தொற்றுள்ளவர் என கொழும்பில் அடையாளம் காணப்பட்ட நபருடன் மன்னார் வங்காலைப் பகுதியில் தொடர்பிலிருந்தவர்களுக்கும், முசலிப் பகுதியில் கொழும்பு மற்றும் மேல் மாகாணங்களிலிருந்து வந்து தங்கிருந்தவர்களுக்கும் இன்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதேவேளை, மாந்தை மேற்கு மூன்றாம் பிட்டிப் பகுதியிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன-என்றார். (எ)

# சரணாலயங்களின் விடுதிகள் மூடல்

கொழும்பு,நவ.03

நாட்டில் கொரோனா தொற்று அச்சத்தால் வனவிலங்குத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து சுற்றுலா விடுதிகள், மற்றும் அதன்கீழ் இயங்கும் முகாம்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே முன்பதிவு செய்த சுற்றுலாப் பயணிகளுக்கு மாற்றுத் திகதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்தத்துறையின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரிய பண்டார அறிவித்துள்ளார். (எ)

# 24 மணிநேரத்தில் 179 பேர் கைது

கொழும்பு,நவ.03

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரக் காலப்பகுதியில் 179 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இக் காலப் பகுதியில் 29 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முகக்கவசம் அணியாத 70 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் 1,812 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 282 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (எ)

# மினுவாங்கொடை கொத்தணியில் 29 நாள்களில் 7,185 ஆக உயர்வு

கொழும்பு,நவ.03

மினுவாங்கொடை ஆடைத் தொழில்சாலையில் ஒக்ரோபர் 3ஆம் திகதி முதலாவது கொரோனா தொற்றாளர் இனங் காணப்பட்டதன் பின்னர் இந்த மாதத்தில் மாத்திரம் 7 ஆயிரத்து 185 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் கடந்த ஜனவரி, இலங்கையில் முதலாவது தொற்றாளராக சீனப் பெண்ணொருவர் இனங்காணப்பட்டதன் பின்னர் ஒக்ரோபர் 2ஆம் திகதி வரையான சுமார் 09 மாத காலப்பகுதியில் நாட்டில் தொற்றாளர்கள் எண்ணிக்கை 3,382 ஆக காணப்பட்டது.

எனினும் ஒக்ரோபர் 3ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரையான 29 நாள்களில் அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது.


மினுவாங்கொடையில் இனங் காணப்பட்ட முதல் நாள் தொடக்கம் மாத இறுதி வரையான தொற்றாளர்கள் எண்ணிக்கையை கொரோனா தடுப்பு தேசிய செயல்பாட்டு மையம் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய,

ஒக்ரோபர் 3 - 1, 4 - 1, 5 - 101, 6 - 729, 7 - 202, 8 - 19, 9 - 30, 10 - 103, 11 - 121, 12 - 90, 13 - 194, 14 - 130, 15 - 68, 16 - 110, 17 - 115, 18 - 61, 19 - 87, 20 - 180, 21 - 166, 22 - 309, 23 - 865, 24 - 368, 25 - 348, 26 - 541, 27 - 457, 28 - 335, 29 - 582, 30 - 633, ஒக்ரோபர் 31 - 239 என 7,185 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். (எ)

உலகச் செய்திகள்

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று: கருத்துக்கணிப்பில் பிடன் முன்னிலை



வாஷிங்டன், நவ. 03

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று நடக்கியது. இந்த நிலையில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பிடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை விட 10 வீதத்தால் முன்னிலையிலுள்ளார் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

என்.பி.சி. நியூஸ் மற்றும் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் ஆகியவை நடத்திய கருத்துக் கணிப்பில், ட்ரம்ப்பிற்கு 42 சதவீத ஆதரவும், பிடனுக்கு ஆதரவு 52 சதவீத ஆதரவும் காணப்படுகின்றது.

அரிசோனா, புளோரிடா, ஜோர்ஜியா, அயோவா, மைனே, மிச்சிகன், மின்னசொட்டா, வட கரோலினா, நியூ ஹம்ப்ஷயர் நெவாடா, பென்சில்வேனியா மற்றும் விஸ்கான்சின் ஆகிய 12 ஒருங்கிணைந்த மாநிலங்களில் பிடன் 6 புள்ளிகள், 51 சதவீதம் முதல் 45 சதவீதம் வரை முன்னிலை வகிக்கிறார் என்று கண்டறிந்துள்ளது.

ஒக்ரோபர் 29 முதல் 31 வரை நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், 57 சதவீத வாக்காளர்கள் ட்ரம்ப் கொரோனா தொற்றுநோயைக் கையாண்ட விதத்தை தவறு என்கிறார்கள். அதே நேரத்தில் 55 சதவீத வாக்காளர்கள் அவரது நிர்வாகம், பொருளாதாரத்துடன் கையாள்வதை அங்கீகரிக்கின்றனர்.

பிடன் மற்றும் ட்ரம்ப் இருவரும் வாக்குகளைப் பெறுவதற்கு கடைசி முயற்சியை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த ஆய்வு வெளியிடப்பட்டது.

அமெரிக்க தேர்தல் திட்டத்தின்படி, ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை 9.3 கோடிக்கும் அதிகமான அமெரிக்கர்கள் வாக்களித்து உள்ளனர். இது 2016 தேர்தலில் எண்ணப்பட்ட மொத்த வாக்குகளில் 67.7 சதவீதமாகும்.

## 10 கணவர்களும் பொருத்தமில்லை: 11ஆவது துணைவரை தேடும் பெண்



நியூயோர்க், நவ. 03

அமெரிக்காவை சேர்ந்த 56 வயது பெண்ணான கேசி, இதுவரை 10 திருமணங்கள் செய்துள்ளார். ஆனால், அவருக்கு இதுவரை பொருத்தமான கணவர் அமைய வில்லையாம். இதனால், அவர் தனக்குப் பொருத்தமான கணவரை - 11ஆவது துணைவரை இன்னமும் தேடி வருகின்றார் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 'தகுதியான மணமகனை கண்டுபிடிக்கும் வரை தொடர்ச்சியாக திருமணம் தொடரும்", என்று கேசி தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் தனது 10ஆவது கணவரை விவாகரத்து செய்த கேசி, இதுவரை இத்தனை திருமணங்கள் செய்து கொண்டது குறித்து சிறிதும் கவலைப்படவில்லையாம். அவரது விருப்பம் ஒரு தகுதியான கணவரைத் தெரிவது மட்டுமே. கேசியின் திருமணம் மிக நீண்டகாலம் நீடித்த திருமணம் 8 வருடங்கள். இதுபோல, மிகக் குறுகிய காலம் ஆறு மாதங்கள்.

இந்நிலையில், திருமண உறவை எப்படி வெற்றிகரமாக நீட்டிப்பது என்று அனுபவத்தில்தான் கற்றுக் கொண்டேன் என்று கூறும் அவர், மூன்றாவது கணவர் மூலம் ஒரு மகனுக்கு தாயாகியுள்ளார். மூன்றாவது கணவர், 'ஐ லவ் யூ' சொல்வதை நிறுத்தியமையால் உறவு பாதிக்கப்பட்டு விவகாரத்து செய்தார் என்றும் கூறியுள்ளார்.

## பல்கலைக்கழகத்தில் தாக்குதல்: ஆறு மாணவர்கள் படுகாயம்

காபூல், நவ. 03

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பல்கலைக்கழகம் ஒன்றில் புகுந்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பில் ஆப்கான் ஊடகங்கள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:

காபூல் நகரத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் நேற்று வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மூன்று பயங்கரவாதிகள் துப்பாக்கிகளுடன் திடீரென்று உள்ளே நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர். முன்னதாக பல்கலைக்கழகத்தின் வடக்குப் பகுதி நுழைவாயிலிலும் அவர்கள் தாக்குதல்களை நடத்தினர்

இந்தத் தாக்குதல்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக தகவல் இல்லை. எனினும் 6 மாணவர்கள் படுகாயமடைந்தனர் என்று தெரிய வருகின்றது. பல்கலைக்கழகத்திற்கு விரைந்த இராணுவத்தினர் மாணவர்களை மீட்டனர்.

தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேநேரம் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரையிலும் எந்த ஒரு பயங்கரவாதக் குழுவினரும் பொறுப்பேற்கவில்லை.

## அமெரிக்காவுக்கு இணையாக தனது இராணுவத்தை உருவாக்குகிறது சீனா

பீஜிங், நவ.03

உலக வல்லரசான அமெரிக்காவுக்கு இணையாக தனது இராணுவத்தை நவீனமயப்படுத்த சீனா நடவடிக்கை எடுத்துள்ளது.

உலக வல்லரசாக ஆதிக்கம் செலுத்துவது யார் என்பதில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் அண்மைக் காலமாக மோதல் போக்கு நீடிக்கிறது.

பொருளாதாரம், வர்த்தகம் என பிற துறைகளில் அமெரிக்காவுக்கு நிகராகவோ அல்லது அதற்கு மேலாகவோ சீனா முன்னேறியுள்ளது. ஆனால், இராணுவ பலத்தில் அதனால், அமெரிக்காவை மிஞ்ச முடியாத நிலையே நீடிக்கிறது.

அடுத்த தலைமுறை ஆயுதங்கள் மற்றும் போர் தளபாடங்களுடன் மிகவும் நவீன முறையில் விளங்கும் அமெரிக்க இராணுவத்துடன் ஒப்பிடுகையில சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் பின்தங்கியே இருக்கிறது.

எனவே அமெரிக்க இராணுவத்துக்கு நிகராக சீனாவின் இராணுவத்தையும் நவீனமயப்படுத்த அந்த நாடு திட்டமிட்டுள்ளது. குறிப்பாக சீன இராணுவம் தோற்றுவிக்கப்பட்ட நூற்றாண்டான 2027ஆம் ஆண்டுக்குள் அதை நவீனப்படுத்தி மேம்படுத்த சீனா முடிவு செய்துள்ளது.

இதன்படி 2027ஆம் ஆண்டுக்குள் முழுமையான நவீன இராணுவம் ஒன்றை சீனா அமைக்கும். குறிப்பாக அமெரிக்காவுக்கு இணையாக சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் மேம்படுத்தப்படும்.

சீன இராணுவத்தின் இந்த நூற்றாண்டு இலக்கு நடைமுறையாகும்போது, உலகளவில் நவீனத்துவம் பெற்றதாகவும், அமெரிக்காவின் வலிமைக்கு நிகராகவும் சீன இராணுவம் இருக்கும் என சீன பாதுகாப்பு நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## சீன கட்டடங்களில் இஸ்லாமிய அடையாள சின்னங்கள் நீக்கம்



பீஜிங், நவ.03

சீனாவின் நிங்சியா மாகாணத்தின் தலைநகரான யின்சுவானில் உள்ள நங்குவான் மசூதியின் பிரகாசமான பச்சை குவிமாடங்கள், கலசங்கள் தங்க மினாரள் (பள்ளிவாசல்களின் உயரமான கோபுரங்கள்) என்பன அகற்றப்பட்டன. இது சீனாவில் இங்கிலாந்தின் துணைத் தலைவர் கிறிஸ்டினா ஸ்காட் ஒன்லைனில் பகிரப்பட்ட படங்களில் காட்டப்பட்டுள்ளது. மசூதி அதன் நிறம் மற்றும் அலங்காரங்களை அகற்றியுள்ளது.

'நங்குவான் மசூதி' என்ற சொற்கள் சீன மொழியில் கட்டிடத்தில் உள்ளன, மேலும் மசூதி அதன் நிறம் மற்றும் அலங்காரங்களை அகற்றி உள்ளது.

புனரமைப்புக்குப் பிறகு, இப்போது இதுதான் தெரிகிறது. குவிமாடங்கள், மினார்கள் அனைத்தும் போய்விட்டன. எந்த பார்வையாளர்களும் நிச்சயமாக அனுமதிக்கப்படவில்லை. எனவே மனச்சோர்வடைகிறது, "என்று இங்கிலாந்து தூதர் படங்களுடன் எழுதி உள்ளார்.

இஸ்லாத்தின் தாக்கத்தை குறைப்பதற்கான கலாசாரத்தை அழிக்கும் ஒரு பகுதியாக நாடு முழுவதும் உள்ள மசூதிகளில் இருந்து சீனா குவிமாடங்களை அகற்றக்கூடும் என்று இங்கிலாந்தின் டெய்லி மெயில் கூறி உள்ளது.



இது சிலந்தியோ அல்லது பூச்சிகளின் பூங்காவோ அல்ல. அமெரிக்காவின் பிரபல மொடல் அழகி கிம் கார்தஷியனின் வீடு. சிலந்திகள் மீது ஈர்ப்பு கொண்ட அவர் ஹலோவீன் திருவிழாவுக்காக தனது வீட்டை இப்படி அங்கரித்துள்ளார்.

# ட்ரம்பால் 30 ஆயிரம் பேர் தொற்றுக்கு இலக்காகினர்

## ஸ்ரான்போர்ட் பல்கலைக்கழகம் ஆய்வு


நியூயோர்க், நவ. 03

கொரோனா பரவல் குறித்து அக்கறைப் படாமல் ஜனாதிபதி ட்ரம்ப் நடத்திய பிரசாரக் கூட்டங்களால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்பட்டிருக் கலாம். 700 பேருக்கும் மேற்பட்டோர் மரணமாகியிருக்கலாம் என்று ஸ்ரான்போர்ட் பல்கலைக் கழக ஆய்வு முடிவில் தெரிய வந்துள்ளது.

ஜூன் 20 தொடக்கம் செப்ரெம்பர் 22 வரை ஜனாதிபதி ட்ரம் 18 பிரசாரக் கூட்டங்களை நடத்தியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், "பிரசாரக் கூட்டத்தில் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் உள்ளிட்ட வழிகாட்டு விதிகளை மக்கள் முழு அளவில் பின்பற்றாத நிலையில் மிகப் பெரிய கூட்டங்களால் கொரோனா தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று ஜனாதிபதி ட்ரம்பை சுகாதார அதிகாரிகள் எச்சரித்தனர்.

"அவர்களின் பரிந்துரை மற்றும் எச்சரிக்கையை எங்கள் ஆய்வு வலுவாக ஆதரிக்கிறது. ட்ரம்ப் நடத்திய கூட்டங்களில் பாதகமான



அம்சங்கள் நிறைய இருந்தன. இக்கூட்டங்களில் ஆயிரக்கணக்கானோரும் சில சமயங்களில் பல்லாயிரக்கணக்கானோரும் பங்கேற்றனர். நோய்த் தொற்று, மரணம் என இவர்கள் அதிக விலை கொடுத்துள்ளனர்" என்று ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது.

# ஊடகவியலாளர்களுக்கு அநீதி: விசாரிக்க ஆணைக்குழு தேவை

## சுதந்திர ஊடக இயக்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.03

**ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசினதும் பொறுப்பாக இருந்தாலும், இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான எந்தவொரு குற்றத்துக்கும் நீதி வழங்கப்படாத வரலாறே காணப்படுகின்றது என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.**

நவம்பர் 2ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது:-

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசே தற்போதும் ஆட்சியில் இருக்கின்றது.

இந்தநிலையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து நீதியான விசாரணைகள் இடம்பெறுமா என்ற கேள்வி நீதிக்காக குரல் எழுப்பும் ஊடக சமூகத்தினரிடையே ஏற்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க முழு அளவிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்-என்றுள்ளது.



# மன்னாரில் கவனயீர்ப்பு

மன்னார், நவ.03

நாட்டில் தற்பொழுது அதிகரித்துள்ள கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் உடல்கள் எரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி, இந்தப் போராட்டம் சுகாதார நியமங்களைப் பின்பற்றி, மன்னார் நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் உடல்கள் எரிக்கப்படும் நடவடிக்கை, உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்ய வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

# கொழும்பு முகத்திடல் அச்சத்தால் மூடப்பட்டது

புத்தளம்,நவ.03

புத்தளம் நகரிலுள்ள கொழும்பு முகத்திடல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது என புத்தளம் நகர சபைத் தவிசாளர் கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றின் இரண்டாம் கட்ட பரவல் மிகவும் தீவிரமடைந்துள்ள நிலையில், புத்தளம் நகரிலுள்ள பொதுமக்கள் மாத்திரமின்றி, வெளியூர் மக்களும் ஒன்றுகூடும் ஒரு தளமாக விளங்கும் கொழும்பு முகத்திடலை தற்காலிகமாக மூடத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், புத்தளம் பாத்திமா கல்லூரி வீதியில் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த வாராந்த சந்தையும் வியாபாரிகளுக்கிடையிலான தூரம், பொதுமக்களின் நெரிசல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தற்காலிகமாக புத்தளம் பொலிஸ் வீதிக்கு மாற்றப் பட்டுள்ளது.

எனவே, அநாவசியமாக, மக்கள் வெளியே செல்வதையும், சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோரை அழைத்துக்கொண்டு வெளியே சுற்றித்திரிவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.-என்றார். (எ)

# அனைத்து வீதிகளுக்கும் காப்பெற்

ஹற்றன்,நவ.03

மலையக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள அனைத்து பிரதான வீதிகளும் காப்பெற் வீதிகளாக மாற்றியமைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார். புரட்டொப் வீதியை புனரமைக்க நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# பதுளை இ.போ.ச. ஊழியர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு, நவ.03

பதுளை இ.போ.ச. பஸ் டிப்போவின் 8 ஊழியர்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என அந்த மாவட்ட மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பதுளை மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறியுள்ளதாவது:

கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ள கொழும்பைச் சேர்ந்த பொலிஸ் அதியாரியொருவருடன் தொடர்பிலிருந்தவர்களே இவ்வாறு சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் பி.சி.ஆர். பரிசோதனை செய்துகொண்ட பொலிஸ் அதிகாரியொருவர், அதன் முடிவுகள் கிடைப்பதற்கு முன்னரே பசறையிலுள்ள டிப்போ ஊழியர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், அவரது பி.சி.ஆர்.பரிசோதனை அறிக்கை வெளியானது. அதில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தே இ.போ.ச. பஸ் டிப்போவின் 8 ஊழியர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்-என்றார்.

# கொரோனாவை தடுக்க அரசுக்கு ஆதரவளியுங்கள்

## கரு ஜயசூரிய கோரிக்கை

கொழும்பு, நவ.03


நாட்டில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவளிக்கவேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, 20ஆவது திருத்தத்தின் பின்னர் இலங்கை மிகவும் வலுவான நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியை கொண்டிருப்பதால் அவர் வைரஸ் பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் கரு ஜயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீதியான சமூகத்திற்காக தேசிய இயக்கம் 20ஆவது திருத்தத்தை எதிர்த்தாலும் அதன் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களை ஜனாதிபதி வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

# வாழ்வாதாரம் இழந்தோருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும்

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு,நவ.03

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பொதிகளைப் பெறாதவர்கள் மற்றும் ஊரடங்கு உத்தரவால் வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்க பொருளாதார மறுமலர்ச்சிக்கான ஜனாதிபதி பணிக்குழு தீர்மானித்துள்ளது.

கொரோனா தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களையும் வீட்டிலேயே தனிமைப் படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனிமைப்படுத்தல் நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிப்பது தொடர்பில் நேற்று அலரிமாளிகையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தவை வருமாறு:

கொரோனா தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் அனைவரையும் அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தை உரியமுறையில் நடைமுறைப் படுத்த வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றில்லாத ஒரு நாட்டை உருவாக்கத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்கள், பொலிஸார், பிரதேச சுகாதார சேவைகள் அலுவலகங்கள் மற்றும் கிராமக் குழுக்களுடன் இணைந்து பிரதேச செயலகம் செயல்படுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தத் திட்டம் பிரதேச செயலகங்கள் மட்டத்தில் செயல்படுத்தப்பட்டு கிராமக் குழுக்கள் மூலம் நிவாரணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும்.

நீர், மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய வாழ்வாதாரங்களைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபடுவோரின் பாதுகாப்புக்கு சுகாதார ஆலோசனைகள் முன்னுரிமை வழங்கப்படும்.

கொரோனா தொற்றுக்கான ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவமனைக்கு செல்வதற்குப் பதிலாக, சுகாதார சேவைகள் தொலைப்பேசி மூலம் அறிவிக்கப்பட்டு, மருத்துவ பரிசோதனைகளுக்காகப் பிரதேச அளவிலான குழுக்களுக்குப் பரிந்துரைக்கப்படும்-என்றார். (எ)

செய்திகள்

# தனிநபர்கள் தேவைக்கு ஏற்ப நாட்டை முடக்க தயாரில்லை

## பொதுஜன பெரமுன கூறுகிறது




கொழும்பு,நவ.03

**சில தனிநபர்களின் தேவைகளுக்கு ஏற்றவகையில் நாட்டை முற்றாக முடக்க அரசாங்கம் தயாரில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இவ்வாறு குறிப்பிட் டார். இது நாட்டின் பொரு ளாதாரத்தை அழிக்க வழி வகுக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் எதிர்க்கட்சியினர், அரசாங்கம் மீது குற்றச்சாட் டுக்களை முன்வைத்து வருவ தால் நாட்டில் அனைத்து நடவடிக்கைகளையும் முடக் குவது எளிதான காரியமல்ல.

முற்றிலும் அவசியமான தாகக் கருதப்பட்டால மட் டுமே நாடு முழுமையாக முடக் கப்படும்.

அத்தோடு ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி செய்து முன்னோக் கிக் கொண்டு செல்வார் என்ற நம்பிக்கையை நாட்டு மக்கள் கொண்டுள்ளனர்-என்றார். (எ)

# 125 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதி

## 400 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,நவ.02

கொரோனா வைரஸ் தொற் றால் பாதிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் எண்ணிக்கை நேற் றுக் காலை 11 மணிவரையான காலப்பகுதியில் 125 ஆக உயர் வடைந்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட நிலை யங்களிலுள்ள பொலிஸ் அதிகா ரிகள் கொண்டே குழுவே இவ் வாறு கொரோனா தொற்றுக் குள்ளாகியுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவர்கள் நான்கு முதல் ஐந்து நாட்களுக்கு முன்னர் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்றுக்குள் ளான அதிகாரிகளுடன் நெருங் கிய தொடர்புள்ளவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட 400 அதிகாரிகள் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்பட் டுள்ளனர். 2,000 அதிகாரிகளை சுயதனிமைப்படுத்தலுக்கு உட் படுத்துமாறும் முன்னர் ஆலோ சனை வழங்கப்பட்டிருந்தது. (எ)

# போதைப்பொருள் குற்றச்சாட்டில் 99 பேர் கைது

கொழும்பு,நவ.03

மேல் மாகாணத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணிவரையான கடந்த 24 மணிநேரத்தில் நடத் தப்பட்ட பரிசோதனை நடவ டிக்கைகளின் போது போதைப் பொருள் மற்றும் மதுபானங்கள் விற்பனை செய்த குற்றச்சாட் டில் 99 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட 21 பேரும், கஞ்சா மற் றும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 59 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டி பிரதேசத் தில் 35 கிராம் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய் [illegible] (எ)

# ஊரடங்கை வரவேற்கும் சுகாதார பரிசோதகர்கள்

கொழும்பு,நவ.03

மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவை நீடிக்கும் தீர்மானத்தை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண வரவேற்றுள்ளார். இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் விடுக்கும் உத்தரவுகள், அறிவுறுத்தல்களை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுமக்கள் பெருமளவில் ஒன்று கூடுவதையும் வெளியில் நடமாடுவதையும் தவிர்க்க வேண்டும்.

கொரோனா தொற்றார்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலிருந்து சட்ட விதிமுறைகளை மீறி வெளியேறுவதால் ஆரோக்கியமான நிலையிலுள்ள மக்களும் பாதிக்கப்படும் அபாய நிலைமை உருவாகும். இது நாட்டின் சுகாதாரத் துறைக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்-என்றார். (எ)




# சுவாச கோளாறால் அவதிப்படுவோரை அனுமதியுங்கள்

கொழும்பு,நவ.03

சுவாசக் கோளாறுள்ள நோயாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுமாயின் நிலைமை மேலும் மோசமடை யக்கூடும். எனவே சுவாசக் கோளாறால் அவதியுறும் நோயா ளர்களை உடன் மருத்துவ மனைகளில் சேர்க்க வேண் டும் என பிரதிச் சுகாதார சேவை கள் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் நோய் அறிகுறிகள் இருக்கு மாயின் 0117 966 366 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் அவர் கேட் டுக்கொண்டுள்ளார். (எ)

# இறக்குமதி செய்யப்படும் கடல் உணவுகளுக்கான வரி உயர்வு

கொழும்பு,நவ.03

இறக்குமதி செய்யப்படும் மீன், கருவாடு, (மாசி, நெத்தலி) ஆகிய அத்தியாவசிய பொருள் கள் மீதான வரி அதிகரிக்கப்பட் டுள்ளது என மீன்வளத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் மீன்வளத் துறை யைப் பாதுகாக்க இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மீன்வளத்துறை அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் மீனுக்கு 200 ரூபா வரி அறவிடப்படுகின்றது.

சந்தையில் மீன் விற்பனைகள் குறைவடைந்துள்ள நிலையில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த இந்தத் தீர்மானம் மேற்கொள் ளப்பட்டுள்ளது-என்றார். (எ)

# மக்கள் ஆணையை மீறி அரசு செயல்படக்கூடாது

## எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து



அநுராதபுரம்,நவ.03

ஜனாதிபதி மற்றும் பாராளு மன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை மீறி அரசாங்கம் செயல்படக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலி யுறுத்தியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

கொரோனா ஒழிப்புச் செயல்பாட்டுக்கு சமாந்தரமாக, கொரோனாவால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயல்பாடும் மேற் கொள்ளப்பட வேண்டும்.

எனினும் கடந்த காலங்க ளில் இந்த இரண்டு செயல் பாடுகள் சரிசமமாக இடம்பெற் றதை நாம் அவதானிக்க வில்லை. இதனால் மக்களே இன்று தங்களுக்கு உதவுமாறு அரசாங்கத்திடம் கேட்க ஆரம் பித்துள்ளனர்.

எனினும், அரசாங்கம் இதுவரை மக்களுக்கான நிவாரணத்தை வழங்கவில்லை. இதற்காகவா இந்த ஆட்சியை மக்கள் அமைத்தனர்.

மக்களின் துயரங்களை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படியானால் மட்டுமே மக்களுக்கான ஆட் சியை அமைக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என இரண்டு தேர்தல்களில் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு பெரும்பான் மையான ஆதரவை வழங்கியுள் ளனர்.

எனவே, அரசாங்கம் இந்த ஆணைக்கு இணங்க செயல் பட வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும்.

இதிலிருந்து பின்வாங்கக் கூடாது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் இன்று விஷேட பூஜைகளை நடத்தி வருகின் றது.

இதில் நான் குறைகூறப் போவதில்லை. எனினும், இதற்கு முன்னர் பி.சி.ஆர். இயந் திரங்களை அரசாங்கம் கொள் வனவு செய்திருக்கலாம். வென்டிலேட்டர்களைக் கொள் வனவு செய்திருக்கலாம். மருத் துவ வசதிகளை அதிகரித்திருக் கலாம். இதனை மேற்கொண்டி ருந்தால் கொரோனா தொற் றைக் கட்டப்படுத்தியிருக்க முடியும்-என்றார். (எ)

# இணையவழி கல்வி வழங்கத் தீர்மானம்

## கல்வி அமைச்சர் தகவல்



கொழும்பு,நவ.03

முன்னர் திட்டமிட்டபடி நவம்பர் 09ஆம் திகதி மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காக பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பில் இந்த வார இறுதியில் முடிவு எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பான முடிவை எட்டுவதற்கு முன்னர் அது தொடர்பில் ஆழமாகச் சிந்தித்து செயல்பட வேண்டும் எனக் கூறினார்.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பு மிக முக்கியமானது.

மாணவர்கள் கல்வி அறிவு பெறுவதை உறுதி செய்ய, தேவை யேற்படின் மாணவர்களுக்கு இணையவழிக் கல்வியை வழங்கத் தீர்மானித்துள்ளோம்-என்றார். (எ)

# தீயணைப்பு, மீட்பு பிரிவில் ஐவருக்கு தொற்று உறுதி

கொழும்பு,நவ.03

கொழும்பு தீயணைப்பு மற் றும் மீட்புப் பிரிவில் ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள் ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை யிலிருந்து பதிவான அனைத்து கொரோனா நோயாளர்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலை களில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் பதிவான 1,767 கொரோனா தொற்றாளர்களில் 1,635 பேர் மினுவங்கொட மற்றும் பேலிய கொட கொத்தணிப் பரவ லுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (எ)

செய்திகள்

# கருவாட்டு தொழிற்சாலையை மீளவும் இயக்க நடவடிக்கை

முல்லைத்தீவு, நவ.03

**முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசத்தின் கருவாட்டு தொழிற்சாலையின் செயல்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

கொவிட் 19 காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கருவாட்டுஉற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கலந்துரையாடினார்.

கொரோனா தொற்று காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மீன் ஏற்றுமதி தடைசெய்யப்பட்டுள்ளதுடன் பேலியாகொடை மீன் சந்தையுடன் தொடர்பைப் பேணிய கூலர்வாகன சாரதிகள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து அவர்களுடன் தொடர்பினை பேணிய பலர் முல்லைத்தீவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் கடற்றொழிலாளர்கள் பிடிக்கும் மீன்களை சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதை தொடர்ந்து கருவாடு உற்பத்தியை விரிவு படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுப்பதாக மீனவர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, முல்லைத்தீவில் உள்ள கருவாட்டு தொழிற்சாலை கொரோனா தொற்று நீக்கும் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறித்த தொழிற்சாலையில் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரத்தின் ஊடாக ஐந்து மணித்தியாலங்களில் சுமார் 400 கிலோ கிராம் கருவாடு உற்பத்தி செய்ய முடியும்.

இந்நிலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற கருவாடுகளை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் ஊடாக கொள்வனவு செய்து சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக சந்தைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)



## கிளிநொச்சி சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி, நவ. 03

கிளிநொச்சியில் கொரோனா சூழ்நிலையில் கடமைகளை இலகுபடுத்துவதற்காக பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப் பட்டது.

தற்போதைய கொரோனா வைரஸ் பரவும் இக்கட்டான நிலையில் கடமைகளை இலகு படுத்துவதற்காக சுகாதார அமைச்சினால் உலக வங்கியின் நிதியில் கொவிட் 19 அவசர கால பதில் மற்றும் சுகாதார அமைப்புகள் தயார்நிலை திட்டம் மூலம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 12 பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



யாழ். நகர லயன்ஸ் கழகத்தால்

## காரைநகர் வைத்தியசாலைக்கு முகக்கவசங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாண நகர லயன்ஸ் கழகத்தினரால் காரைநகர் ஆதார வைத்தியசாலைக்கு கொரோனா தடுப்பு அங்கி, முகக் கவசங்கள் என்பன அன்பளிப்பு செய்யப்பட்டன.

யாழ்ப்பாண நகர லயன்ஸ் கழகம் முன்னெடுத்து வரும் கொரானா விழிப்புணர்வு செயல்பாடுகள் மற்றும் சமூக நலனோம்பு திட்டங்களின் ஓர் அம்சமாகவே இந்தப் பொருட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் நகர லயன்ஸ் கழக மாவட்ட உதவி பொருளாளர் ,மற்றும் மாவட்ட ஆளுநரின் ஆலோசகரின் பங்கு பற்றுதலோடு காரைநகர் ஆதார வைத்தியசாலைக்கு கொரோனா தடுப்பு அங்கிகளும் முகக் கவசங்களும் வழங்கி வைக்கப்பட்டன.(ஐ-3)

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 03

வட இலங்கை சங்கீத சபையால் எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட இருந்த சகல மட்டங்களுக்குமான எழுத்துப் பரீட்சைகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாகவே பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகளுக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் வட இலங்கை சங்கீத சபை அறிவித்துள்ளது. (ஐ-3)

## மாமியாரை 20 அடி பள்ளத்தில் தள்ளிக் கொன்றார் மருமகள்

நுவரெலியா, நவ. 03

வாய்த்தர்க்கம் முற்றியதால் மாமியாரை 20 அடி பள்ளத்தில் தள்ளிக் கொன்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நுவரெலியா - நானுஓயா - சமர்செட் தோட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது:

மாமியாருடன் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் முற்றியதில், மருமகள் அவரை 20 அடி பள்ளத்தில் தள்ளிவிட்டார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு பள்ளத்தில் தள்ளப்பட்ட மூதாட்டி படுகாயமடைந்தார். அவரை மீட்ட அயலவர்கள் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். ஆனால், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

இதையடுத்து, மாமியாரைக் கொன்றார் என்ற குற்றச்சாட்டில் 38 வயதான பெண் நானு ஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றனர்.

## போதை பிரியர்களால் தொல்லை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 03

போதைப் பொருள் பயன்படுத்துவதற்காக தினமும் கூடும் இளைஞர்களால் தாம் பல அசௌகரியங்களை சந்திக்கிறோம். இந்த விடயத்தில் கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்வியங்காடு ஜே/257 கிராமசேவையாளர் பிரிவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்வியங்காடு, ஜே/257 கிராம சேவகர் பிரிவில் சிங்கராஜ வைரவர் கோயிலடியில் ஆட்களற்ற காணியில் கூடும், வேளாதோப்பு வீதி, விநாயகர் வீதி மைதானத்தடி, புதிய செம்மணி வீதி குளத்தடி போன்ற இடங்களைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கூடி போதைப் பொருளை பயன் படுத்துகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும், அப்பகுதியில் சிலர் போதைப் பொருள் விற்பனையிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அத்துடன், போதைப் பொருள் பயன்படுத்துபவர்களால் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்ளும் அதே வேளை, தங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இது விடயத்தில் கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-3)



## வவுனியாவில் அரியவகை அரணை படமாக்கப்பட்டது




வவுனியா, நவ. 03

இலங்கைக்கே உரித்தான தனித்துவமான அரியவகை அரணையான டசியா ஹலியானா வவுனியா, ஓமந்தைக் காட்டுப் பகுதியில் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் மரங்களிலேயே வாழும் இந்த அரணை ஒரு சில தினங்களுக்கு முன் வவுனியா ஓமந்தைக் காட்டில் படமாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தனித்துவமான ஓர் அரியவகை உயிரினமாக இது இருப்பதனால் 70ஆம் ஆண்டுகளில் வந்த இரண்டு ரூபா நாணயத்தாளில் இதன் படம் அச்சிடப்பட்டிருந்தமையும் நினைவுகூரத்தக்கது. (ஐ)



## ஊடகவியலாளர் சுய தனிமைப்படுத்தப்பட்டார்

திருகோணமலை, நவ. 03

திருகோணமலை நகரப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர் ஒருவரது வழித்தடத்தில் தொடர்புடைய வகையில் ஊடகவியலாளர் ஒருவர் குடும்பத்துடன் தனிமைப்படுத் தப்பட்டுள்ளார்.

பேலியகொடை கொத்தணியுடன் தொடர்புபட்டு கொரோனா தொற்று உறுதியானவர்களில் ஒருவர், திருகோணமலை நகர், தபால் கந்தோர் வீதியில் உள்ள ஜிம்மிற்கு சென்று வந்திருந்தமை அறியப்பட்டிருந்தது.

இதையடுத்து குறித்த ஜிம்மிற்கு அண்மைய நாட்களில் சென்றவர்கள் விபரங்கள் திரட்டப்பட்டு அவரவர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள னர்.

இவ்வாறு ஜிம்முடன் தொடர்புபட்டே குறித்த ஊடகவியலாளர் குடும்பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஊடகவியலாளரது சகோதரனும் தொற்று உறுதியானவர் சென்ற ஜிம்மிற்கு சென்று வருபவர் என்பதை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu

# வெற்றியுடன் டில்லி, தோல்வியுடன் பெங்களூர் பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி

அபுதாபி, நவ. 03

நேற்றைய ஆட்டத்தில் பெங்களூர் அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது டில்லி. இந்த வெற்றியின் மூலம் டில்லி அணி பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றது. பெங்களூர் அணி இந்தப் போட்டியில் தோல்வியடைந்தாலும் 14 புள்ளிகளை ஏற்கனவே பெற்றிருந்ததால் நிகர ஓட்ட அடிப்படையில் பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறியது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கும் ஐ.பி.எல். தொடரில் நேற்றிரவு அபுதாபியில் நடந்த 55ஆவது ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் டில்லி கப்பிட்டல்ஸ் அணியும் மோதின. பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறுவதை உறுதி செய்வதற்கான தீர்க்கமான போட்டியாக இது அமைந்தி ருந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி கப்பிட்டல்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடியது பெங்களூர் அணி. பிலிப்பே, படிக்கல் இணை தொடக்கம் கொடுத்தது. ஆரம்ப வீரர் பிலிப்பே 12 ஓட்டங்களி லேயே ரபாடாவின் பந்தில் ஷாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்தார் அணித் தலைவரும் அதிரடி ஆட்டக்காரருமான விராட் கோலி. இருவரும் பொறுப் பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் மெது வாக அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

ஆனால், ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் 29 ஓட்டங்களை எடுத்த நிலையில் கோலி ஆட்டமிழந் தார். அவரைத் தொடர்ந்து வந்தார் அதிரடி வீரர் ஏபி டி வில்லியர்ஸ், இந்நிலையில் 41 பந்துகளை சந்தித்து 5 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்களை எடுத்த படிக்கல் நோர்ட்ஜேயின் பந்தில் 'போல்ட்' ஆனார்.

வில்லியர்ஸிற்கு பின்னர் துடுப்பாட்ட வரிசை இல்லாததால், அணி தடுமாற்றத்தைச் சந்தித்தது. வில்லியர்ஸ் தனி ஆளாகப் போராடினார். ஆனால், அவரால் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. 2 சிக்ஸர்கள் ஒரு பௌண்ட்ரியுடன் 21 பந்துகளில் 35 ஓட்டங்களை எடுத்திருந்த அவர், 'ரன் அவுட்' ஆனார்.

இதைத் தொடர்ந்து 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்த பெங்களூர் அணி 152 ஓட்டங்களைப் பெற்றது.

டில்லியின் பந்து வீச்சில் நோர்ட்ஜே 3, ரபாடா 2, அஸ்வின் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லிக்கு பிரித்வி ஷா, தவான் இணை தொடக்கம் கொடுத்தது. ஷா வெறுமனே 9 ஓட்டங்களுடன் வெளியேறினார்.



அடுத்துக் களம் புகுந்த ரஹானே தவானுடன் இணைந்து அதிரடி காட்டினார். பெங்களூரின் பந்து களை அநாயசமாக எதிர்கொண்ட இருவரும் அரைச் சதங்களைக் கடந்தனர்.

தவான் 6 பௌண்ட்ரிகளை விளாசி 54 ஓட்டங்களு டன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 60 ஓட்டங்களைக் குவித்த ரஹானேயும் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் 7 ஓட்டங்களுடன் வெளியேறினாலும், தவான், ரஹானே யின் இணைப்பாட்டம் பலமான அத்திவாரமாக இருந்த மையால் அணியை இலகுவாக வெற்றியை நோக்கி அழைத்து சென்றனர் ரிஷப் பந்தும் ஸ்ரொய்னிஸூம்.

இறுதியில் 19 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 154 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது டில்லி அணி.

பெங்களூரின் பந்து வீச்சில் சஹ்பரஸ் அகமட் 2 விக் கெட்களையும், முஹமட் சிராஜ், வாஷிங்டன் சுந்தர் ஆகி யோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)



# கிறிஸ்கெய்ல் ஓய்வு?

அபுதாபி, நவ. 03

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இருந்து அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் ஓய்வு பெறுகிறார் என்று தவறான தகவல் கள் பரப்பப்படுகின்றன.

ஐ.பி.எல்லில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக கிறிஸ்கெய்ல் விளையாடி வருகின்றார். நடப்பு தொட ரில் பிளே ஓவ் வாய்ப்பை தவறவிட்டு அந்த அணி வெளி யேறியுள்ளது. இந்த நிலையில், கிறிஸ் கெயில் ஐபில் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாக சமூக ஊடகங்களில் தகவல்கள் பரப்பப்பட்டு வரு கின்றன.

ஐ.பி.எல். கிரிக்கெட் குறித்து கிறிஸ்கெய்ல் தனது ருவிட்டரில், "என்னுடைய சீசன் முடிவுக்கு வந்தாலும், தொடர்ந்து ஐ.பி.எல். கிரிக்கெட்டைப் பாருங்கள். நன்றி." என்று பதிவிட்டிருந்தார். நடப்பு முடிவுக்கு வந்ததையே கெயில் அந்தபதிவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இதையே சான்றாக்கி கெய்ல் ஓய்வு பெற்று விட்டார் என்று சமூகவலைத்தளங்களில் கருத்துக்கள் பகிரப்படுகின்றன.

அண்மையில் கொல்கத்தா நைற் ரைடர்ஸூக்கு எதிரான ஆட்டம் முடிந்த பிறகு மன்தீப் சிங் மற்றும் கிறிஸ் கெயில் ஆகியோர் உரையாடினர். அப்போது, ஒருபோதும் ஓய்வுபெறக் கூடாது என கெய்லிடம் மன்தீப் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த கெய்ல், "ஓய்வை ரத்து செய்யுங்கள், இப்போதைக்கு ஓய்வு முடிவு வரப்போவதில்லை" என்றார்.

நடப்பு ஐ.பி.எல். சீசனில் முதல் 7 ஆட்டங்களில் விளையாடாத கெய்ல், கடைசி 7 ஆட்டங்களில் களமிறங்கினார். அதில் 3 அரைச்சதங்கள் உட்பட 288 ஓட்டங்களை எடுத்துள்ளார். விளையாடிய போட்டி களில் 5 போட்டிகளில் அணிக்கு வெற்றியை தேடிக் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஐ.பி.எல்லில் இருந்தும் ஷேன் வற்சன் ஓய்வு

சென்னை, நவ. 03

சகல வகையான கிரிக்கெட் போட்டிகளி லிருந்தும் ஓய்வு ஷேன் வற்சன் ஓய்வு பெறவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலிய வீரரான ஷேன் வற்சன் 59 டெஸ்ட், 199 ஒருநாள், 56 ருவென்ரி -20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர், கடந்த 2016 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஷேன் வற்சனை 4 கோடி இந்திய ரூபாவுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 10 கோடி ரூபாவுக்கு 2018 ஆம் ஆண்டு ஏலத்தில் எடுத்தது. அந்த ஆண்டு சென்னை சம்பியன் பட்டத்தை வெல்ல வற்சன் முக்கிய காணமாக இருந்தார்.

இந்நிலையில் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் தான் ஓய்வு பெறுவுள்ளார் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் நிர்வாகத்திடம் வற்சன் தெரிவித்துள்ளார். இது தொடர்பான தகவல்கள் நேற்று வெளியாகின. இந்நிலையில் அவரை பயிற்சியாளராக நியமிக்க சென்னை அணி திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை அணிக்கு முன்னதாக ராஜஸ்தான் றோயல்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகளுக்காக விளையாடிய வற்சன் எல்லாமாக 145 போட்டிகளில் ஆடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

DREAM11 IPL

## இன்றைய ஆட்டம்

ஹைதராபாத் சன் ரைசர்ஸ் **எதிர்** மும்பை இந்தியன்ஸ்

**மைதானம் : சார்ஜா**

நேரம் : இரவு 7.30 (இலங்கை)

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| **15565 \| வே \| 1979**<br>கொக்குவில் \|இந்து \|கனடா<br>Divorced \| Engineer<br>அவிட்டம் (மகரம்) \|செவ் : 8 | **15895 \| ப \| 1986**<br>சாவகச்சேரி\| இந்து<br>BA Following\| SL \|செவ் : 8<br>பூரம் (சிம்மம்) \| 158 செ.மீ |
| **15793 \| ந \| 1986**<br>கரவெட்டி \| இந்து \| SL<br>Teacher \| சூ-செவ் : 12<br>புனர்பூசம் (மிதுனம்) | **16114\| வே \| 1990**<br>கரவெட்டி \| இந்து \|170செ.மீ<br>Following BA \| SL<br>புனர்பூசம் (மிதுனம்) |
| **15967 \| வே \| 1988**<br>நெல்லியடி \| இந்து<br>IT Engineer \| UK \|175செ.மீ<br>மிருகசீரிடம் (இடபம்) | **16087 \| கோ \| 1992**<br>கரவெட்டி\| இந்து \| 151 செ.மீ<br>Computer Assistant \| SL<br>சதயம் (கும்பம்) |
| **15919 \| வே \| 1990**<br>சுன்னாகம்\| இந்து<br>Teacher\| SL \| 164 செ.மீ<br>உத்தரம் (கன்னி) | **15805 \| வே \| 1974**<br>கந்தர்மடம் \| இந்து<br>Senior Auditor \| SL<br>அச்சுவினி (மேடம்) |
| **16105 \| வே \| 1990**<br>கரவெட்டி\| இந்து \| செவ்:1<br>Business Analyst \|France<br>புனர்பூசம் (மிதுனம்) | **15838 \| ந\| 1996**<br>சுன்னாகம்\| இந்து<br>A/L \| SL \| 165 செ.மீ<br>சதயம் (கும்பம்) |

20, கே.கே.எஸ் வீதி,, கொக்குவில், யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.11.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூார்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்



8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
பெண்கள் எதிர்கொள்ளும் உளப்பிரச்சினையும் தீர்வுகளும்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி



5.00 மணி : ட்றெய்லர் டைம்
6.00 மணி : மூவி டோக்கீஸ்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை
10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் விவேக் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN Television இசை HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - தமிழ்
6.00 மணி : தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி : தரம் 08 - கணிதம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) புவியியல்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) பௌதீகவியல்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - கணிதம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித அந்தோனியார் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.30 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்